86-வது சு. தி. கொ. - 2005

# அரியாலை

# 86-வது

# சு. தி. கொ. விழா

## 2005

**10-04-2005** ஞாயிற்றுக்கிழமை
**12-04-2005** செவ்வாய்க்கிழமை
**14-04-2005** வியாழக்கிழமை
(பார்த்திப வருடப்பிறப்பன்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Little Indian Fashion

LIF

77, Grand Bazaar, JAFFNA.



Specialist in
Wedding Sarees
&
Salwar Kamez.

ஆடை உலகில்
அந்புதத் தெரிவிந்கு
யாழ்நகரில் ஓர் நவீன
காட்சியகம்.

# லிட்டில் இந்தியன் பெஷன்

77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

☎ 021-2226440


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# 86-வது சுதேசிய

# திருநாட் கொண்டாட்ட விழா - 2005

## சுதேசிய கீதம்

பெருக இன்பம் பெருகும் - நம்
அரியா லையம்பதிப் பெருநாள்
வருக நல் வளமுடன் - வையகத்தின்
பாரிய சுதேசியத் திருநாள்

சித்திரைத் தீந்தமிழ் நாள் - தமிழர்கள்
சிந்தை குளிர்ந்திடும் நாள்
நித்திய மேன இன்ப நினைவினிலே
நீந்திடும் சார்ந்த திருநாள்

ஆண்டு புதிதொன்று - பிறந்ததென
ஆனந்தம் பொங்கிடும் பொன்னாள்
யாண்டும் எதன்மிசையும் - கருணையின்
ஈரம் பயின்றிடும் நாள்

இன்பப் புதுத் திருநாள் - இனிமை
ஏறும் பொது திருநாள்
அன்புக் கனி பிழிந்தே - அழகினில்
ஆடிக் கழித்திடும் நாள்

கலையினில் ஊறிடும் நாள் உடல்
கலையினில் தேறிடும் நாள்
சிலையென இருந்தே தீந்தமிழ் - அன்னை
வென்று சிரித்திடும் நாள்.

*ஆக்கம் : அரியாலையூர், கவிஞர் வே. ஐயாத்துரை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை

# 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

## நிர்வாக சபை

**போஷகர்கள்** : திரு. செ. பத்மநாதன்
*(திட்டப் பணிப்பாளர், வட கிழக்கு மாகாண மீள் கட்டமைப்பு - நியாப்)*
கலாநிதி, சு. மோகனதாஸ்
*(துணை வேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)*

**தலைவர்** : திரு. க. மயில்வாகனம்

**பொதுச் செயலாளர்** : திரு. சரா. புவனேஸ்வரன்

**பொருளாளர்** : திரு. இ. ப. மோகன்ஜித்

**உப தலைவர்கள்** : திரு. நா. இராஜலக்ஸ்மன் (கலை)
திரு. ச. குணதாஸ் (விளையாட்டு)

**உப செயலாளர்** : திரு. P. செந்தில்குமரன் (கலை)
திரு. க. சுபீர்குமார் (விளையாட்டு)

**உப பொருளாளர்கள்** : திரு. N. கவிந்தன் (கலை)
திரு. வி. பாலரூபன் (விளையாட்டு)

**நிர்வாகசபை உறுப்பினர்கள்** : திரு. S. T. கணநாதன்
திரு. மு. விஸ்வநாதன்
திரு. சி. சதாசிவம்
திரு. ஆ. தேவராசா
திரு. S. C. செல்வராசா
திரு. த. பஞ்சலிங்கம்
திரு. க. சண்முகலிங்கம்
திரு. பொ. நடராஜா
திரு. அ. உபயசேகரம்
திரு. க. நாகேந்திரம்
திரு. த. ஹரிசாந்
திரு. V. K. சண்முகலிங்கம்

**கணக்காய்வாளர்** : திரு. S. T. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சபை - 2005

## நிர்வாக உறுப்பினர்கள்



**இருப்போர் : (இடமிருந்து வலம்)**

திரு. S. K. சண்முகலிங்கம், திரு. K. நாகேந்திரம், திரு. P. நடராஜா, திரு. K. சண்முகலிங்கம், திரு. சரா. புவனேஸ்வரன் (செயலாளர்), திரு. K. மயில்வாகனம் (தலைவர்), திரு. R. P. மோகன்ஜித் (பொருளாளர்), திரு. S. T. கணநாதன், திரு. S.C. செல்வராஜா

**நிற்போர் : (இடமிருந்து வலம்)**

திரு. S. குணதாஸ் (விளையாட்டு தலைவர்), திரு. N. கவிந்தன் (உப பொருளாளர்), திரு. K. சுபீர்குமார் (விளையாட்டு செயலாளர்), திரு. N. இராஜலக்ஸ்மன் (கலைத் தலைவர்), திரு. M. வில்வநாதன், திரு. T. பஞ்சலிங்கம், திரு. A. தேவராஜா, திரு. V. பாலரூபன் (உப பொருளாளர்), திரு. T. ஹரிசாந், திரு. S. சதாசிவம்

**படத்தில் இல்லாதோர் :** திரு. A. உபயசேகரம், திரு. P. செந்தில்குமார் (கலைச் செயலாளர்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THARRMSONS

**BUILDING CONTRACTORS, BUILDING MATERIAL SUPPLIERS.**

**&**

# COMMUNICATIONS

Local : 021 - 2222790
021 - 2226272
021 - 2227391



IDD : 0094 - 21 - 2222790
0094 - 21 - 2226272
Fax : 0094 - 21 - 2222790

Prop : T. Tharmenthiran (Babu)

**Off :**
**Kanagaratnam Rd. Junction,**
**Ariyalai, Jaffna.**

**Res :**
**No. 9.Velappar Lane,**
**Off Kanagaratnam Road,**
**Ariyalai, Jaffna.**




⇨ **Photostat & Tourist Van Service,**
⇨ **Rent for : Concrete Mixcer & Vibrator Machine.**

**Distributors for :**

- **CIC PAINT (PVT) LTD.**
- **OLE SPRINGS BOTTLTRS (PVT) LTD.**

# E. S. PERAMPALAM & CO.



General Merchants,
Commission Agent
&
Importers Dealers in Cycle Accessories.

50, KASTHURIYAR ROAD, JAFFNA.

T.P. / Fax : 021-2222988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை
# சுதேசிய திருநாட் கொண்டாட்டம்

1919ம் ஆண்டு முதலாம் உலகயுத்தம் முடிந்த பின்னர் ஆங்கிலேயரின் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில், எங்கள் ஊர்மக்கள் இந்தத் தேசிய விழாவைக் கொண்டாட நினைத்து சுதேசிய உணர்வும், பிறந்த நாட்டின் பற்றும் சேர்ந்து இந்தக் கொண்டாட்டத்தை ஆரம்பித்தனர்.

86 ஆண்டு காலமாக இந்த நிகழ்ச்சியை விடாது தொடர்ந்து அரியாலை மக்கள் கொண்டாடி வருகின்றார்கள் என்று எண்ணும்போது இந்த மக்களின் தேசிய உணர்வும், சுதேசிய மனமும் ஒருங்கே இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. மேலும் இவ்வாறு ஒரு நிகழ்ச்சி இலங்கைத் தீவில் வேறு எங்கும் நடப்பதில்லை என்று கூறின் மிகையாகாது.

ஆரம்பித்து மூன்று பெரும் விழாவைக் கண்ட மக்கள் ஒருபோதும் விடாது தொடர்வார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. வெள்ளி விழா, பொன் விழா, பவள விழா என்று மூன்று பெரும் விழாக்களைக் கண்டுவிட்டோம். நூற்றாண்டு விழாவிற்கு இப்போது இருக்கும் பலர் இருக்கமாட்டார்கள். எனவே 90ஆவது ஆண்டு விழா நிகழ்ச்சியை பெரிதாக நடத்துவது விரும்பத்தக்கது. ஆரம்ப காலத்தில் எமது சுதேசிய விளையாட்டுக்கள் பல போட்டி ரீதியாக நடந்தன. தாச்சி, கிட்டி போன்றவை பிரதான இடத்தை எடுத்தன. காலப் போக்கில் தற்கால விளையாட்டுக்கள் இப்போது நடைபெறுகின்றன. ஆரம்பித்தவர்களின் நோக்கமும் எண்ணமும் இப்போதும் பிரதிபலித்துக்கொண்டே இருக்கின்றன.

இந்தியாவில் மகாத்மாகாந்தி, மகாகவி சுப்பிரமணியபாரதி போன்றவர்கள் தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமை சற்றும் விலகாத வேற்றுமை இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்கப் பாடுபட்டனர். அந்த எழிற்சியும் அவர்களின் விடாமுயற்சியும்தான் அரியாலையிலும் காணக்கூடியதாக இருந்தது. வேறுபாடு இல்லாத சமூகத்தை "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலரின் மந்திரத்தை மக்களுக்கு உணர்ச்சியோடு அந்த பெரும் தலைவர்கள் கூறியது இங்கு நன்றாக பிரதிபலித்தது.

மேலும் இக் கொண்டாட்டம் தமிழர்களின் வருடப் பிறப்பன்று நடக்கின்றபடியால் சுதேசிய உணர்வு மாத்திரமல்ல தமிழரின் பண்பாடு, சுதந்திரம் முதலியன இந்த நாளில் அடங்கும். ஆங்கிலேயரின் வருகையால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தீய பழக்கங்களை எம்மவர் கற்றுக்கொண்டனர். பல நிலைகொண்டு விட்டன. இவை எமது தேச இயற்கைக்கும் பண்பாட்டிற்கும் பழக் வழக்கங்களுக்கும் முற்றாக முரண்பட்டவை. அவற்றை விலக்கும் நோக்கோடும் மக்கள் எங்கள் பணியோடு செயற்படவும் இவ்விழா பெரிதும் உதவியது என்றே கூறலாம். அப்படியிருந்தும் ஆங்கில மோகமும், பழக்கங்களும் எங்களை விட்டபாடில்லை. இப்படியே போனால் நம் நாட்டிலேயே ஒரு இலண்டன், ஒரு பரிஸ், ஒரு ஒஸ்லோ, ஒரு ரொறேன்ரோ, ஒரு பேர்லின் உண்டாகிவிடும். அதைத் தடுக்கக்கூடியது இந்தத் சுதேசிய கொண்டாட்டமே.

இக் கொண்டாட்டம் முத்தமிழையும் வளர்த்து வருகின்றது. இயல், இசை, நாடகம் மூலம் இவை நன்றாக மக்களிடம் போய்ச் சேருகின்றன. கொண்டாட்டத்தையொட்டி நடைபெறும் கலைப் போட்டிகள் மாணவர்களின் கலையார்வத்தினை வளர்த்துக்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. கலைப் போட்டிகளில் ஆர்வத்தோடு போட்டியாளர்களைப் பங்குபற்ற வைப்பது காலத்தின் தேவையாகும். முதல் நாடகமான "சத்தியவான் - சாவித்திரி"யில இருந்து 85-வது விழாவின்போது மேடையேற்றப்பட்ட "காவியத் தலைவன்" நாடகம் வரை கொண்டாட்டத்திற்காக மேடையேற்றுவதற்கு தயாரிக்கப்படும் பிரமாண்டமான தயாரிப்புக்கள் தொடர்கின்றன. புதிய பல இளம் நடிகர்கள் உருவாக்கப்பட்டு வருகின்றனர்.

அண்மைக் காலத்தில் சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தில் அடி நாதமாக பல புதிய விளையாட்டுக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. நவீன சிந்தனைகளும், துடிப்பான செயற்பாடுகளையும் கொண்ட பல எமதூர் இளைஞர்கள் நிர்வாகக் குழுவில் சேர்க்கப்பட்டு இவ் விழாவினை ஆரம்பித்தவர்களின் நோக்கத்தையும், சுதேசிய எண்ணத்தையும் வளர்க்க அயராது உழைத்து வருவது வரவேற்கத்தக்கது.

தமிழ் இனத்தின் விடுதலைக்காகவும், அவர்களிடம் சுதேசிய சிந்தனையை ஊட்டுவதற்கும் ஆக்கபூர்வமான பல செயற்பாடுகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் இவ்விரு அடைவுகளுக்காக எம்மூர் மக்கள் கடந்த 85 வருடங்களாக உந்துசக்தியாக இருந்து வருகின்றனர் என்பதை எண்ணும்போது மெய் சிலிர்க்கின்றது. சுதேசிய தினக் கொண்டாட்ட விழாவின எதிர்பார்ப்புக்களுக்கும், தமிழ் இனத்தின் சுதேசியத்திற்கும் எமது செயற்பாடுகளை மேலும் இறுக்கமடையச் செய்ய உறுதி பூணுவோம்.

வாழ்க தமிழ்,

வளர்க சுதேசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அரியாலை

# 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா

## 2005

**காலம் : 10-04-2005 ஞாயிற்றுக்கிழமை**

**நிகழ்ச்சிகள்**

**காலை 6-30 மணி :**

**மரதன் ஓட்டம்** - ஆண் (உள்ளூர்) 5 மைல்

ஆதரவு : " UNIT " திரு. உதயகுமார் -

347, கே. கே. எஸ். வீதி, மனோகரா தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம்.

**சைக்கிள் ஓட்டம்** - ஆண் 10 மைல் (உள்ளூர்)

ஆதரவு : லக்ஷி வீடியோ மூவிஸ் - உரிமையாளர் : M. குலதேவா, (லண்டன்)

**சைக்கிள் ஓட்டம்** - பெண் 5 மைல் (உள்ளூர்)

ஆதரவு : அமரர் I.S. சண்முகநாதன் ஞாபகார்த்தமாக

திருமதி. வா. சண்முகநாதன், நாவலர் வீதி, அரியாலை.

ஆரம்பம் : அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் முடிவு : அரியாலை சனசமூக நிலையம்

**காலை 9-00 மணி :** (அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**கிறிக்கெற்** - 16 வயதின் கீழ் (உள்ளூர்)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் - A எதிர் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் - B

ஆதரவு : சிறி நகையகம், உரிமையாளர் : P. கண்ணன் - கண்டி வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை

**காலை 10-30 மணி :** (அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**கிறிக்கெற்** - திறந்த போட்டி (மாவட்டம்) **4 STAR** எதிர் **11 STAR**

ஆதரவு : அமரர் சதீஸ் ஞாபகார்த்தமாக - ஜெயா வைண்டிங் வேக்ஸ், யாழ்ப்பாணம்.

**பிற்பகல் 3-30 மணி :** (அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**உதைபந்தாட்டம்** - திறந்த போட்டி (திணைக்களங்களுக்கிடையிலானது)

**விளையாட்டுத் திணைக்கள விளையாட்டு அணி**

எதிர்

**யாழ் மாநகரசபை விளையாட்டு அணி**

ஆதரவு : பாசுபதன் பாசுதன் (லண்டன்)

**மாலை 7-30 மணி :** "மின்னொளியில"

(அரியாலை அருணோதயா சனசமூக நிலைய ஆடுகளத்தில்)

**கரப்பந்தாட்டம்** - திறந்த போட்டி Setup (கழகங்களுக்கிடையிலானது)

***ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம்***

எதிர்

***ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்***

ஆதரவு : அமரர் A. சண்முகநாதன் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் (லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் : **12-04-2005** (செவ்வாய்க்கிழமை) மாலை 7-30 மணி

இடம் : அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய "அமரர் விஸ்வநாதன் அரங்கு"

தலைமை : திரு. க. மயில்வாகனம் அவர்கள் (விழாத் தலைவர்)

சிறப்பு விருந்தினர்கள் :

திரு. சோ. சிவசுந்தரம் (தலைவர், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்)

திரு. ச. த. கணநாதன் (தலைவர், அரியாலை சனசமூக நிலையம்)

## நிகழ்ச்சிகள்

- மங்கள இசை : *அரியாலையூர், இ. யசோதரன் குழுவினர்.*
- மங்கள விளக்கேற்றல்.
- அகவணக்கம்.
- தேவாரம்.
- தலைமையுரை.
- கலைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசு வழங்குதல் :
  திரு. க. மயில்வாகனம் (தலைவர்)

(மேடையில் பரிசில்கள் பெறத்தவறுபவர்களுக்கு பரிசில்கள் மீண்டும் வழங்கப்படமாட்டாது)

பேச்சு :
- செல்வன். கலொக் கணநாதன் உசாந்தன் (கீழ்ப்பிரிவு முதலிடம்)
- செல்வி. கனிஜா மகேந்திரன் (மத்தியபிரிவு முதலிடம்)
- செல்வி. கௌசிகா சிவபாலசிங்கம் (மேற்பிரிவு முதலிடம்)
- செல்வன் இரத்தினசபாபதி மயூரன் (கீழ்ப்பிரிவு முதலிடம் - ஆங்கிலம்)

➢ புளுகு : செல்வன். குணரட்ணம் கோபிரமணன் (முதலிடம்)

➢ பாப்பா மலர் : செல்வி தட்ஷிகா தர்மராஜா (முதலிடம் - தமிழ்)

,, செல்வன் ஸ்ரீஸ்கந்தராசா சஜீவன் (முதலிடம் - ஆங்கிலம்)

- சிறப்பு விருந்தினர்களின் உரை.
- **நாடகம் :** அரியாலை. கலைவாணி ச. ச. நிலையம் வழங்கும்
  "அவசரத்தால் வந்த அவஸ்தை"
  (முதலிடம் பெற்றது)
- **நாடகம் :** கோப்பாய் ஆசிரிய கலாசாலை வழங்கும்
  **"தமிழன் கனவு"**
  ( மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்றது )

## ஏழுநல்லூர், அருணாவின்

# " இசைக் கோலங்கள் "

**தாயகப்பாடல்கள், பழைய - புதிய பொப்பிசை, துள்ளிசைப் பாடல்கள்**

திரு. நா. இராஜலக்ஸ்மன் (உப தலைவர் - கலை)

திரு. N. கவிந்தன் (உப பொருளாளர் - கலை)

திரு. P. செந்தில்குமரன் (உப செயலாளர் - கலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

காலம் : **14-04-2005** (வியாழக்கிழமை) பிற்பகல் 2-00 மணி

(பார்த்திப வருடப்பிறப்பன்று)

இடம் : அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்

தலைமை : திரு. க. மயில்வாகனம் அவர்கள் (விழாத் தலைவர்)

பிரதம விருந்தினர் : திரு. சு. கமலநாதன் அவர்கள் ( பொறியியலாளர் )

சிறப்பு விருந்தினர் : திரு. வே. கா. கணபதிப்பிள்ளை

( பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை )

### நிகழ்ச்சிகள்

- சுதேசிய தீபம் எடுத்து வருதல்.

  ( ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து அரியாலை வீரர்களால் )
- சுதேசிய தீபம் ஏற்றுதல்.
- மங்கள விளக்கேற்றல்.
- சுதேசியக் கொடியேற்றுதல்.
- சுதேசிய கீதம் இசைத்தல்.
- பிரதம விருந்தினர் விளையாட்டுப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தல்.

| | |
|---|---|
| **100 மீற்றர் ஓட்டம்** | 13, 16, 19 வயது (ஆண், பெண்) |
| **50 மீற்றர் ஓட்டம்** | 10 வயதின் கீழ் (ஆண், பெண்) |
| **1500 மீற்றர் ஓட்டம்** | பொது (ஆண்கள்) |
| **தலையணைச் சண்டை** | பொது (ஆண்கள்) |
| **வழுமரம் ஏறுதல்** | பொது (ஆண்கள்) |

**வினோத ஆடைப்போட்டி** 16 வயதின் மேல், 16 வயதின் கீழ்

சிவசக்தி வைத்திய நிலைய ஆதரவில் : அரியாலை முன்பள்ளிச் சிறாருக்கானது.

| | |
|---|---|
| **எலி ஓட்டம்** | 19 வயதின் கீழ் (ஆண் - குழு) |
| **சிம்மாசன ஓட்டம்** | 16 வயதின் கீழ் (ஆண் - குழு) |
| **உப்பு ஓட்டம்** | 16 வயதின் கீழ் (பெண் - குழு) |
| **பாலர் ஓட்டம்** | 5 வயதின் கீழ் |
| **100 மீற்றர் வேக நடை** | 40 வயதின் மேல் (ஆண்கள்) |
| **75 மீற்றர் வேக நடை** | 30 வயதின் மேல் (பெண்கள்) |
| **4 x 200 மீற்றர் அஞ்சல் ஓட்டம்** | (கழகங்களுக்கானது) |
| **4 x 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்** | (உள்ளூர் அணிகளுக்கானது) |

### இசை அசைவுப் போட்டி

திருமணமான பெண்கள், 13 வயதின் மேல் - பெண்கள், 13 வயதின் கீழ் - பெண்கள்

- **கயிறிழுத்தல்** —— இளைஞர்கள் எதிர் சம்சாரிகள்.
- **கயிறிழுத்தல்** —— யுவதிகள் எதிர் திருமணமானவர்கள்.
- **பொதுக்கூட்டமும், பரிசளிப்பும்.**
- **நன்றியுரை.**
- **கொடியிறக்குதல்.**

| | | |
|---|---|---|
| **திரு. ச. குணதாஸ்** | **திரு. க. சுபீர்குமார்** | **திரு. வி. பாலரூபன்** |
| (உப தலைவர் - விளையாட்டு) | (உப செயலாளர் - விளையாட்டு) | (உப பொருளாளர் - விளையாட்டு) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை விழா

காலம் : **14-04-2005** (வியாழக்கிழமை) இரவு 7-00 மணி

(பார்த்திப வருடப்பிறப்பன்று)

இடம் : அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானம்

தலைமை : திரு. க. மயில்வாகனம் அவர்கள் (விழாத் தலைவர்)

பிரதம விருந்தினர் : திரு. ச. உருத்திரேஸ்வரன் அவர்கள்

(தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தர், கமநலச் சேவைகள் திணைக்களம் - யாழ்.)

சிறப்பு விருந்தினர் : திரு. கோ. சி. வேலாயுதம் அவர்கள்

(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

## நிகழ்ச்சிகள்

- மங்கள இசை : அரியாலையூர், இ. யசோதரன் குழுவினர்
- மங்கள விளக்கேற்றல்.
- அகவணக்கம்.
- தேவாரம்.
- தமிழ்த்தாய் வாழ்த்து.
- பெருமைக்குரியவர்களை அழைத்து வருதல்.

| | | |
|---|---|---|
| கல்வி | : | திரு. சோ. சிவசுந்தரம் |
| சமூக சேவை | : | திரு. ச. த. கணநாதன் |
| கலை | : | திரு. அ. சந்திரகுமார் |
| விளையாட்டு | : | திரு. க. நாகேந்திரம |

**O/L 10A, A/L 3 A மாணவர்கள்.**

- தலைமையுரை.
- ஆசியுரை : திரு. செ. பத்மநாதன் அவர்கள்
  கலாநிதி, சு. மோகனதாஸ் அவர்கள்
- கௌரவித்தல்.
- பிரதம விருந்தினர் உரை.
- சிறப்பு விருந்தினர் உரை.

☞ அரியாலை, 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் பிரமாண்டமான தயாரிப்பு :

## " தாய்த் திருநாடு " (வரலாற்று நாடகம்)

கதை வசனம், நெறியாழ்கை : திரு. இ. கமலநாதன் இணை : திரு. எஸ். ரீ. கணநாதன்

**யாழ்ப்பாணத்தின் சிறந்த நட்சத்திரப் பாடகர் யார்?**

## யாழ். ஐங்கரன் இசைக்குழுவின் இசையமைப்பில் !!

## "சுதேசிய இசைமாலை பாட்டுப் போட்டி"

யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடகர்கள் கலந்து கொள்வர்.

**இத்தனையும் கலை ரசனையோடு கண்டுகளிக்க விரைந்து வாருங்கள்.**

| திரு. க. மயில்வாகனம் | திரு. இ. ப.மோகன்ஜித் | திரு. சரா. புவனேஸ்வரன் |
|---|---|---|
| தலைவர். | பொருளாளர். | செயலாளர். |

86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை

86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்

கௌரவ தலைவர்

**திரு. க. மயில்வாகனம் B.A. (Cey.) அவர்களின்**

(ஓய்வுபெற்ற மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அதிகார சபை)

## வாழ்த்துச் செய்தி

அரியாலை மக்களால் சித்திரைப் புத்தாண்டு தினத்தில் பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்டுவரும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 86-வது வருட விழாத் தலைவர் என்ற முறையில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இயற்கை வளங்கள் மட்டுமன்றி கலை, கல்வி, விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் திறமையுடைய மக்களைக் கொண்டது எமது கிராமம். 1919-ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை ஐக்கிய உணர்வோடு எமது கலை, கலாசார விழுமியங்களை வளர்க்கவும், வெளிக்கொணரவும், வெளி உலகிற்கு பறைசாற்றவும் களம் அமைப்பது இச் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவாகும்.

நான் 46-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்போது பொருளாளராகக் கடமையாற்றி விழாவிற்கு எனது பங்களிப்பை வழங்கியிருந்தேன். அதன் பின்னர் அரியாலையில் தொடர்ச்சியாக வாழாவிட்டாலும் விழாவின்போது பங்குகொண்டதும், விழா களைகட்டிய காலங்களில் அரியாலை புதுப் பொலிவுடன் திகழ்வதையும் நான் உட்பட எவரும் மறக்கமாட்டார்கள்.

கடந்த காலங்களில் யுத்த அனர்த்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வின்போதும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வா்ழும் போதும் எம்மூர் வாசிகள் வருடந்தோறும் தவறாது இவ் விழாவினை தொடர்கின்றமை எம்மூரவர்களின் சுதேசியப் பற்றினை துலாபரமாகக் காட்டுகின்றது.

இந் நவீன யுகத்தில் பழமை வாய்ந்த எம் மூதாதையர்களின் கலை, கலாசார, விளையாட்டு அம்சங்களையும் விநோத உடை, தலையணைச் சண்டை, தடைதாண்டி ஓட்டம், முதியோர் ஓட்டம், கயிறு இழுத்தல் போன்ற சுவாரசமான நிகழ்வுகளை உள்வாங்கி புத்தாண்டு தினத்தில் மக்கள் குதுகலிக்க வழிசமைக்கும் இவ்விழா 86 ஆண்டு களைப் பூர்த்தியாக்குவதோடு இன்னும் பல்லாண்டுகள் தொடர்ந்து எமது கிராமமும் மக்களும் சிறக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**- க. மயில்வாகனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா
சிறப்புற எமது வாழ்த்துக்கள்.

# E-SONS - JAFFNA.

உங்கள்
மங்கல அமங்கல வைபவங்களுக்கு
நாடுங்கள்

# ஈ-சன்ஸ்

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை :
கண்டி வீதி,
சாவகச்சேரி.

☎ 021 - 222 2695

**உங்கள் மங்கள நிகழ்வுகள் எதுவானாலும்**
**மேலும் மெருகூட்ட......**



- சொக்கட்டான் பந்தல்
- சாதாரண பந்தல்
- மணவறை வகைகள்
- பிளாஸ்ரிக், இரும்புக் கதிரைகள்
- பாய்கள்
- சமையல் பாத்திரங்கள்
- மேக்கப்
- ஐசிங்
- மணமகளுக்குரிய நகை சோடனைகள்



அனைத்து சேவையையும் பெற்றுக்கொள்ள
நிங்கள் நாடவேண்டிய இடம்

# விஷ்ணுஜா பந்தல் சேவை

2, நொத்தாரிஸ் லேன், அரியாலை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை

86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்

காப்பாளர்

**திரு. செ. பத்மநாதன்** B.A. (Econ.) Dip.Re.Dcw(Israel) S.L.A.S.

அவர்களின

( திட்டப் பணிப்பாளர், வட கிழக்கு மாகாண மீள் கட்டமைப்பு - நியாப் )

# ஆசிச் செய்தி

86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவைக் கொண்டாடி வருகின்ற விழாக் குழுவினருக்கும், நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும், அரியாலை இளைஞர்களுக்கும், அரியாலை வாழ் பொதுமக்களுக்கும் எனது அன்பான, கௌரவமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது பாரம்பரியம், விழுமியங்கள் அழிவைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் அதனை எதிர்த்து எமது பாரம்பரிய, கலை, இலக்கிய, விளையாட்டு, நாடக, பண்புகள் எமது மக்களிடம் நிலைபெற்று நிலைத்து நிற்கவேண்டும். அதன்மூலம் முழு ஈழத் தமிழர்களும் தமது தேசியத்தைப் பராமரிக்க, பேணிப் பாதுகாப்பதில் ஈடுபடுத்திக் கொள்வார்கள் என்ற தீர்க்க தரிசனத்தில் எமது முன்னோரால் நடப்பட்ட வித்து - இன்று தொடர்ச்சியாக இளைஞர்கள், பாலகர், வயோதிபர்கள், என்ற பாகுபாடின்றி யாவராலும் எழுச்சியுடன் பங்குபற்றிக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இது எமது எழுச்சியையும், தொடர்ச்சியையும் மட்டுமல்ல ஈழத் தமிழர்கள் தமது விழுமியத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற தேசிய உணர்வுடன் புத்துணர்வு பெற்று வளர்வதற்கும் காரணமாக இருந்து வருகிறது.


இவ்விழா வெறுமையானதோர் கொண்டாட்டம் மாத்திரமல்லாமல் மக்களது மன உணர்வில் ஏற்பட்டு வருகின்ற ஓர் எழுச்சியுமாகும். இதனை ஆரம்பித்தவர்கள், அதனை வளர்த்தவர்கள், ஊக்குவித்தவர்கள் மறைய இன்று மூன்றாம் நான்காம் தலைமுறையினர் இதனைச் சிறப்புடன், வளத்துடன் முன்னெடுத்து வருவது பாராட்டுதற்குரியது. அது அவர்களது சமூகக் கடமை. அதனைச் சிறப்புடன் செய்துவரும் இளைஞர்களுக்கு எமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந் நிகழ்வில் இரண்டறக் கலந்துகொண்டவன் என்ற காரணத்தால் எனது தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


- செ. பத்மநாதன் (காப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Alpha



◆ பணப் பாதுகாப்பு பெட்டிகள


◆ வீட்டு அலுமாரிகள ◆ கோவை அலுமாரிகள்

◆ உருக்கு அலுமாரிகள ◆ உருக்கு மேசைகள்



மற்றும்

◉ றெக்சின்,
◉ றெக்சின் மெத்தைகள்
◉ கொம்பியூட்டர் கதிரைகள்
◉ கொம்பியூட்டர் மேசைகள





யாவும் மலிவு விலையில் தரமான பொருட்களாள் பெற்றுக்கொள்ளலாம்.

## திருச்செந்தூரன் வர்த்தக நிலையம்

315, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். ☎ 2225910

---

நவீன மின் உபகரணங்களைக்கொண்டு
சிறந்த முறையில்

**ஒலி - ஒளி அமைப்பாளர்கள்**

# றோயல்



ஒலி - ஒளி
அமைப்பாளர்கள்

அரியாலை.

உரிமையாளர் : ச. சுந்தரலிங்கம் (சுந்தரம்)

46/6, இராஜேஸ்வரி வீதி, அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர்**

**பேராசிரியர் சு. மோகனதாஸ் B.Se. (Hons)(S.L.), Ph.D. (Adelalde), C.Chem. அவர்களின்**

## வாழ்த்துச் செய்தி

எமது சுதேசிய உணர்வு ஒவ்வொருவர் உள்ளத்திரும் இயல்பாகவும், பரம்பரை பரம்பரையாகவும் வளர்ந்து வருகிறது. அந்த உணர்வு, ஒழுக்கம், கட்டுப்பாடு, சிந்தனை, தியாகம், பாரம்பரியம் என்ற பல்துறைப் பரிமானங்களைக் கொண்டதாகும். அவற்றைத் தொடர்ந்தும் பேணி மானிட தத்துவத்தின் உயர்ந்த தன்மையை நிலைநாட்ட வேண்டியது எமது கடமையாகும்.

சுதேசிய திருநாட் கொண்டாட்டம் கல்வி, கலை, விளையாட்டு, பண்பாடு, சமூக இசைவாக்கம், ஐக்கியம் போன்ற பல்வேறு துறைகளை இளைஞர்களுக்கு கற்றுக்கொடுக்கின்றது. இக் கொண்டாட்டம் ஒவ்வொரு அரியாலை மகனுக்கும் உரியதாகும். அவர் எங்கிருந்தாலும் இந்நாளை நினைவுகூரத் தவறமாட்டார். அந்தளவுக்கு இக் கொண்டாட்டம் பரம்பரை பரம்பரையாக வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 85 வருடங்களாகத் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டுவரும் இக் கொண்டாட்டம் 1919ஆம் ஆண்டு சுதேசிய உணர்வுகொண்ட இளைஞர்களால் தீர்க்கதரிசனத்துடன் ஆரம்பிக்கப்பட்டதாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும், மகிழ்ச்சியடைகின்றேன். காலத்தின் தேவைகளை எல்லாம் உள்வாங்கி இக் கொண்டாட்டம் பல்லாண்டு வாழவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

- சு. மோகனதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
பிரதம அதிதி (விளையாட்டு)

# திரு. சு. கமலநாதன் அவர்களின்

( பொறியியலாளர் )

## வாழ்த்துச் செய்தி

*இன்று நடைபெறும் 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது, எங்கள் அரியாலையூர் மூதாதையர்களால் தமிழ்ப் புதுவருடப் பிறப்பன்று தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டு, இன்று 86-வது வருடமாகின்றது. இவ்விழா தொடர்ந்து நடைபெறுவதுடன், அவற்றுடன் ஈடுபடுபவர்கள் மனம் தளராது ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.*

*எங்கள் ஊர் முன்பு கல்வியிலும், வியைாட்டுத் துறையிலும் யாழ் மாவட்டத்தில் முன்நிலை வகித்து வந்தது. எனவே இவற்றை முன்நிலைக்கு கொண்டுவர வேண்டியது எம் எல்லோரது பொறுப்பாகும்.*

*தங்கள் சிரமத்தையும் நேரத்தையும் பாராது, இப்பணியில் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிர்வாக உறுப்பினர்களுக்கு நன்றி கூறுவதுடன், இடையூறுகள் இன்றி இவ் விழா தொடரந்து நடைபெற இறைவனைவேண்டி வாழ்த்துகின்றேன்.*

- சு. கமலநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை

86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்

பிரதம விருந்தினர்

**திரு. ச. உருத்திரேஸ்வரன்** B.A. (S.L),

Dip. in Agricultute (S.L) **அவர்களின்**

(தலைமைப்பீட பெரும்பாக உத்தியோகத்தர் - கமநலச் சேவை திணைக்களம் - யாழ்ப்பாணம்)

## வாழ்த்துச் செய்தி

*ஈழத்திருநாட்டின் முடியாட்சிக் காலத்திலும், அந்நியர் ஆட்சிக் காலத்திலும், அதைத் தொடர்ந்த ஆட்சிக் காலத்திலும் ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களாகவும், தீர்மானம் எடுப்பவர்களைத் தட்டிக் கேட்பவர்களாகவும், நாட்டின் சமூக அரசியல் பொருளாதார கல்வி மேம்பாட்டு திட்ட வரைஞர்களாகவும் இருந்து அவ்வழி வந்த மூதாதையோரில் குறிப்பிடத்தக்கவர்களான ஸ்ரீமான் காசிப்பிள்ளை, ஸ்ரீமான் கனகரத்தினம், ஸ்ரீமான் கதிரவேலு, ஸ்ரீமான் சிற்றம்பலம், திரு. பரமு கந்தையா போன்றோரின் தீர்க்கதரிசனத்தோடு கூடிய ஒரு விழாவாக 1919ம் ஆண்டில் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.*

*ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் விதேசிய மோகத்தில் நாட்டம் கொண்டு மக்கள் பிறழ்வு அடைய இருந்தவேளை மக்களை ஒற்றுமைப்படுத்தி எமது சுதேசிய கலை, கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் ஒரு புரட்சிகரமான, ஏனையோர் வியக்கும் வகையில் எழுச்சி விழாவாக கொண்டாடப்பட்டு இன்றைக்கு எண்பத்தி ஆறாவது விழாவாகக் கொண்டாடப்படுகிறது. எந்தவிதமான வரைவுச் சட்டங்களோ, யாப்புக்களோ, நிரந்தரமான நிர்வாகசபையோ இல்லாமல் முழு அரியாலைக் கிராம மக்களும் இணைந்து இவ்வளவு நீண்ட வருடங்களாக வருடாவருடம் நிர்வாக சபையைத் தெரிவுசெய்து கலைப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், நாடகங்கள் போன்ற பல கலை நிகழ்வுகளையும் நடாத்திச் சித்திரைப் புத்தாண்டு மக்களை மகிழ்ச்சியும் எழுச்சியும் கொள்ளச் செய்யும் விழாவாக இன்றைக்கு வளர்ந்துள்ளது.*

*சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள், வளர்ந்தோர், முதியோர் என்ற சகல தரப்பு மக்களும் தங்கள் மூதாதைகளை நினைவுகூரும் வகையில் கோலாகலமாக இவ்விழாவைக் கொண்டாடி வருவது சிறப்புக்குரியது.*

*இவ்விழா இளைஞர்களாலும் அவர்கள் வழி வருபவர்களாலும் தொடர்ந்து பல நூற்றாண்டுகள் தடையின்றி சிறப்பாகக் கொண்டாடப்படவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.*

*86-வது விழா விமரிசையாகவும், சிறப்பாகவும் நடைபெற எனது வாழ்த்துக்கள்*

*வாழ்க சுதேசியம்! வளர்க தமிழ்! ஓங்குக ஐக்கியம்!*

\- ச. உருத்திரேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை 86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்
சிறப்பு விருந்தினர் (விளையாட்டு)

## திரு. V. K. கணபதிப்பிள்ளை அவர்களின்

(பிரதி அதிபர், சிரேஷ்ட உடற்கல்வி விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை - யாழ்ப்பாணம்)

## ஆசிச்செய்தி

*அரியாலை மக்களால் பாரம்பரியமாகக் கொண்டாடப்படுகின்ற சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 86-வது விழா இவ்வருடமும் கொண்டாடப்படவுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.*

*அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் மாணவர் விடுதியில் இருந்து நான் கல்விகற்ற காலத்தில் அரியாலைப் பிரதேசத்தோடு எனக்கு இருந்த ஈடுபாட்டை மதித்து என்னையும் ஒரு விருந்தினராக அழைத்தமை அரியாலைப் பெருமக்கள் எவ்வளவு நன்றியுணர்வு உள்ளவர்கள் என்பது தெளிவாகின்றது. கல்வி, கலை, விளையாட்டு, உயரிய பண்பு ஆகியவற்றில் பெருமையுள்ள அரியாலை மக்களின் இந்த விழாவில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.*

*86-வது விழா சிறக்க எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் என்போன்றவர்களைக் கௌரவிக்கும் அரியாலை மக்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.*

- V. K. கணபதிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரியாலை

86-வது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின்

சிறப்பு விருந்தினர்

# திரு. கே. சி. வேலாயுதம்

## அவர்களின்

(முன்னாள் கல்விப் பணிப்பாளர் - யாழ்ப்பாணம்)

## ஆசிச்செய்தி

*அரியாலை மண் ஆக்கத்தின் இருப்பிடம். இத் திருவிடத்திலே கலைகள் வளர்ந்து செழித்திருக்கின்றன. முதன்மைப் பிரஜைகளை வடபுலத்திற்குத் தந்து பெருமைகொண்ட பான்மை இம் மண்ணிற்கு உரியது.*

*இன்று எண்பத்தாறாவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழா நிகழவிருக்கும் வேளை, ஒரு நூற்றாண்டை அண்மித்த காலம்வரை இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றதென்றால் அவ்வூர் மக்களின் எண்ணிய முடிக்கும் பான்மையும், திண்ணிய நெஞ்சும், நல்லவே எண்ணும் போக்கும் பளிச்சிடுகின்றன.*

*அரச அதிபர் முதல், பல்துறைப் பதவி அணித் தலைவர்களை, ஏற்றமுறு ஆற்றலர்களை, விளையாட்டு விற்பன்னர்களை, கலைத்துறையில் ஒளிவீசிய அன்பர்களை கண்டு உறவாடி மகிழ்ந்திருக்கிறேன். உயர்கல்விப் பீடத்து துணைவேந்தரைக்கூடத் தந்தமண் அரியாலை. உறுதியான உடலில் உறுதியான உளம் உண்டு என்பதை நன்கு புரிந்து வளப்படுத்திய பேராளர்கள் பிறந்த மண்ணும் இதுவே.*

*கல்வி ஒளிவீசும் கனகரத்தினம் மகா வித்தியாலயம் கல்விப் பணிபுரியும் இடமும் இதுவாகும். சீர்பெருகு சான்றோரை, ஞானமும் கல்வியும் நயந்த நல்லோரை, ஒன்றுபட்டுயரும் உளப்பாங்கினரைக காணக் கிடைப்பதும் இம் மண்ணிலேயாகும்.*

*அந்த வகையில உழைப்பின் உயர்வைந் சித்தரிக்கும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட பெருவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன். விளையாட்டுத் திடலில் தேட்டமான உறுதியும், ஒருங்கிணைவும் அரியாலை மண்ணின் முத்திரையாகும். அஃது என்றும் நின்று நிலைக்க என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.*

- கோ. சி. வேலாயுதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த கல்வியாளர்

# திரு. சோ. சிவசுந்தரம் அவர்கள்



பழமையும் புதுமையும் நிறைந்த கல்விமான்களைக் கொண்ட அரியாலையின் சுதேசிய கொண்டாட்டத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த குடும்பத்தைச் சேர்ந்த சிறப்புப் பட்டதாரியான இவர் அதிபராகப் பணியாற்றியவர். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். நல்ல உள்ளங்கொண்ட கொடையாளியாவார். தனது செலவில் தனது அன்பு மனைவி இராசாம்பாளின் பெயரில் பாலர் கல்வி நிறுவனத்தை ஆக்கிக் கொடுத்த பெருமகனாவார். அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம், அரியாலை சித்துப்பாத்தி இந்து மயான சபை போன்றவற்றின் தலைவராகத் தொண்டாற்றி வருகின்றார். அரியாலை மகன் என்று சொல்வதில் பெருமையும் இன்பமும் கொள்ளும் இவர், உலகின் பல்வேறு நாடுகளில் கல்விப்பணியாற்றிய ஆசான் ஆவார். எல்லோரும் வாழவேண்டும் என்னும் சமதர்ம கொள்கையுடைய இவர் அந்த அடிப்படையில் வாழ்ந்து காட்டியவர், வாழ்பவர்,

நாடகத்தில் நல்ல நாட்டமுடையவர். 1942-ம் ஆண்டு தொடக்கம் சுதேசிய திருநாட் கொண்டாட்டங்களில் பல நாடகங்களில் நடித்துள்ளார். குறிப்பாக இவர் சிவனாகவும் இவரின் மனைவி பார்வதியாகவும் தோன்றி நடித்த "திருவிளையாடல்" நாடகம் பரமேஸ்வரனும் பார்வதியும் பூவுலகத்துக்கு வந்ததுபோன்ற உணர்வை ஏற்படுத்தியதை யாவரும் அறிவர்.

1947-ம் ஆண்டு நடைபெற்ற சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தில் பொருளாளராகவும், 1948-ம் ஆண்டில் செயலாளராகவும் பணிபுரிந்த செய்தியை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம். அரியாலை ஐக்கிய கழகத்தை ஆரம்பிப்பதில் முன்னோடியாக இருந்து அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவராவார். தபால்கட்டைச் சந்தியில் அமைந்துள்ள பொதுச் சந்தையை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவராவார். இவ்வாறு பல பொது தாபனங்களில் நிர்வாகப் பதவிகளை வகித்து எமது அரியாலையின் பல்துறை வளர்ச்சிக்கும் அயராது உழைத்துவரும் இவர், வெளிநாட்டில் சிறிதுகாலம் தொழில் பார்த்ததால் இளம் சந்ததியினருக்கு இவரின் அருமை தெரியாமல் இருக்கலாம் அந்த இடைவெளியை இவ்வாறான கௌரவிப்பு நிகழ்ச்சிகள் போக்கும் என நம்புகின்றோம்.

முதலாவது சுதேசிய திருநாட் கொண்டாட்டத்தில் இவரின் தந்தை சோதிநாதரின் உரையாடல் இடம்பெற்றமை இவர்களின் தலைமைத்துவ தொடர்பையும், ஈடுபாட்டுத் தன்மையையும் புலப்படுத்துவதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இவ்வாறான பாரம்பரியத்தில் வந்த இவர் பல உலகத் தலைவர்களைந் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றவர். குறிப்பாக இந்தியாவின் முன்நாள் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களை நேரில் சந்தித்து உரையாடிய இக் கல்விமானைக் கௌரவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த சமூக சேவையாளர்

# திரு. S.T. கணநாதன் அவர்கள்



அரியாலையம்பதியில் சமூகத் தொண்டிலும், கலை, கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதிலும், கல்வி கேள்விகளில் சிறந்த வரலாற்றுப் பாரம்பரியம்மிக்க குடும்பத்தில் தோன்றிய இவர் சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். மின் பொறியியல் எந்திரி டிப்ளோமா பட்டதாரியாகிய இவர் இலங்கை மின்சார சபையில் பல பதவிகளை வகித்து மின் பொறியியல் உதவியாளராக சேவையாற்றியவர். தன்னுடைய சேவைக் காலத்தில் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் சேவையாற்றி அதிகாரி எனப் பலராலும் பாராட்டப்பட்டவர்.

யாழ் குடாநாட்டில் பல பொதுத் தொண்டு தாபனங்களில் பல்வேறு பதவிகளை வகித்து சேவையாற்றிய பெருந்தகையாவார். யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபல்யமான சிறந்த சேவையாளராக விளங்குகிறார். யாழ் மாவட்ட சனசமூக நிலைய சமாசங்களின் சம்மேளன செயலாளராக இருந்து யாழ் மாவட்ட ரீதியில் சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு மறக்க முடியாத தாகும். யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாச தலைவராகவும் பணியாற்றியவர். யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இயக்குநராகவும், யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் இருந்து நற்பணியாற்றியவர். யாழ் உதைபந்தாட்ட லீக்கில் ஏறக்குறைய 10 ஆண்டுகட்கு மேலாக அதன் தலைவராக அரும்பணியாற்றியவர். யாழ் கரபந்தாட்டச் சங்கத்தின் உப தலைவராகப் பணியாற்றிவரும் இவர், யாழ் ஊனமுற்றோர் புனர்வாழ்வுக்காக ஆற்றிய பணிகள் மிகவும் காத்திரமானவை. அதன் செயலாளராக நான்கு வருடங்களுக்குமேல் பணிபுரிந்துள்ளார். மேலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையின் செயலாளராகவும், நிர்வாக உறுப்பினராகவும் தொண்டாற்றியுள்ளார். மேலும் இலங்கை மின்சார சபையின் வடமாகாண ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் தலைவராகவும், சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க உப தலைவராகவும் இருந்து சிறப்பாக பணிபுரிந்தவராவர்.

அரியாலை மக்கள் யாவராலும் அறியப்பட்ட இவர் அரியாலை சனசமூக நிலைய வளர்ச்சிக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து செயற்படும் தொண்டனாவர். அதன் தற்போதய தலைவரான இவர் இந் நிலையத்தின் நீண்டகால நிர்வாகியாவார். அரியாலையில் உள்ள ஐக்கிய கழகம், மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திச் சங்கம், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம், நாடக மன்றம் ஆகியவற்றில் தலைவர், செயலாளர் போன்ற பெரும் பதவிகளை வகித்து பலரும் பாராட்டும் விதத்தில் செயற்பட்ட செயல் வீரனாவார்.

நாடகத்துறையில் இவர் ஆற்றிய பங்களிப்பு வியக்கத்தக்கது. இவர் பல வெற்றி நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளார். இவர் சிறந்த இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் என்ற பெருமையைப் பெற்றவர். சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களின் சிறப்புக்காக வாழ்நாளில் பெரும் பகுதியை செலவளித்துவரும் இவர் கடந்த பல வருடங்களாக விழாவின் நாடகங்களை நெறிப்படுத்தியுள்ளார். "இராஜ இராஜ சோழன்", "இலங்கேஸ்வரன்", எல்லாளன்", "சங்கிலியன்" போன்றனவற்றைக் குறிப்பிடலாம். மேலும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட பவள விழாவின் பொதுந் செயலாளராகப் பணிபுரிந்து அதன் வெற்றிக்கு உழைத்த பெருமகனாவர். இவரைக் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறந்த விளையாட்டு வீரன்

# திரு. க. நாகேந்திரம் J. P. அவர்கள்

